உயிர் தமிழுக்கு

713.P/894.8111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7/30

17

# உயிர் தமிழுக்கு!

தேசிய நூலகப் பிரி
மாநகர நூலக சே
யாழ்ப்பாணம்.

கவிஞர்

காசி ஆனந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றும் பதிப்பு

வெளியீட்டுக் குழு:

'அன்புமணி'

'நவம்'

'தேனுடன்'

'முகில் அழகன்'

முழக்கம் முருகப்பா

மாஸ்டர் சிவலிங்கம்

# காணிக்கை

தந்தை செல்வாவின் விடுதலை இயக்கத்தில் ஒரு தானை வீரர். செந்தமிழ்ச் செல்வர் இராசதுரையின் பாசறையில் வளர்ந்த பைந்தமிழ் மறவர். வெந்தழல்போல் கவிதை பாடி விடுதலை வெறியூட்டும் உணர்ச்சிக் கவிஞர். சுந்தரத் தமிழ் வாழ தன்னை முழுமையும் அர்ப்பணித்த சரித்திர மனிதர்.

ஆம், கவிஞர் காசி ஆனந்தன் அவர்களைப்பற்றி நாடு நன்கறியும். வரலாறு கதை சொல்லும்.

உணர்ச்சிக் கவிஞரின் துடிப்பான ஓரிரு விடுதலைக் கவிதைகளைத் தொகுப்பாக்கி இங்கே வெளியிடுகிறோம்.

தமிழன்னையின் திருவடிகளுக்கு இச்சிறு கவிதைத் தொகுப்பு மிகவும் பொருத்தமான காணிக்கை தானே — இல்லையா?

தொகுப்பு வெளியீட்டுக் குழு,
மட்டக்களப்பு.

26946

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

392
17

# உயிர் தமிழுக்கு!

✳

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

உணர்ச்சிக் கவிஞர்
காசி ஆனந்தன்

விலை - சதம்: 30.

காசி ஆனந்தன்
கவிதைத் தொகுப்பு வெளியீட்டுக் குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே....


1. விடுதலை கொண்டு வருவோம்!
2. புலியடித்த தமிழகம்!
3. ஏன் சிரித்தாய் வான்முகிலே?
4. அன்னையின் புகழ் பாடு தோழி!
5. ஏழ்மை ஏனடா?
6. சாவும் ஒரு வாழ்வே!
7. விடுதலை கிடையாதோ?
8. விடுதலைக்கு விலை தருவோம்!
9. தமிழை மறப்பேனா?
10. தமிழ் உணர்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞர் வாழ்க்கை

தமிழர் விடுதலை இயக்கத்தின் வரலாற்றில் கவிஞர் காசி ஆனந்தன் தனி இடம் பெறுகிறார்.

இப்பொழுதுதான் கவிஞருக்கு இருபத்தெட்டு வயதாகிறது என்றாலும் மாணவர் பருவத்திலேயே விடுதலைப் போரில் குதித்த அவர் வாழ்க்கை இன்றுவரை ஒரு முழுமையான தியாக வாழ்க்கையாகும்.

விடுதலை இயக்கத்தில் ஈடுபட்ட கடந்த பத்து ஆண்டுகளில் கவிஞர் எட்டுத் தடவைகள் போலிசாரால் கைது செய்யப்பட்டார். சென்னையில் இரண்டு தடவைகள் இந்திய போலிசார் கவிஞரை விசாரணை செய்தார்கள்.

1958ம் ஆண்டு இலங்கையில் தனிச் சிங்கள வெறி தலைவிரித்தாடிய வேளையில் அரசாங்கம் கவிஞரை மூன்று மாதங்கள் தடுப்புக்காவலில் வைத்தது. நடு இரவில் வீடு புகுந்து இராணுவ வீரர்கள் அடிக்கடி கவிஞருக்குத் தொல்லை தரும் பயங்கர நாட்கள் அவை!

சிங்கள சிறி எதிர்ப்புப் போராட்டத்தில் நீதிமன்றம் கவிஞருக்குத் தண்டனை வழங்கியது.

''இந்நாட்டுச் சட்டம் என் தமிழை அழிக்குமெனில்
என்னுடல் அச்சட்டத்தை எதிர்த்தழிக்கும் என்பது மெய்''

என்று கவிஞர் பாடல் வடிவிலேயே கொடுத்திருந்த வாக்குமூலம் நீதி மன்றத்தில் படித்துக்காண்பிக்கப்பட்டது.

தமிழகத்தின் தலைநகரில் வானொலி நிலையத்தின் முன்னால் போராட்டம், சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம், மெரினா கடற்கரையில் உண்ணாவிரதம், இப்படி தமிழ் நாட்டு மண்ணில் அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல்படிப்பை மேற்கொண்டிருந்த காலத்தில் தன் சொந்த நலம், கல்வி, சுகம் அனைத்தையுமே இழந்து சுத்த விடுதலை வீரராக விளங்கினார்.

கவிஞரின் உணர்ச்சி வாழ்க்கை வீரம் நிறைந்த ஒரு விடுதலை வரலாறாகும். சிங்கள சிறி எதிர்ப்பு போராட்டம் நடைபெற்ற காலத்தில் மட்டக்களப்பு போலிஸ் நிலையத்துக்குள் நுழைந்து பெயர்ப்பலகையிலுள்ள சிங்கள எழுத்துக்களை தார் பூசி அழித்தபோது கவிஞர் போலிசாரால் கைது செய்யப்பட்டு பலமாகத் தாக்கப்பட்டார். அன்று கவிஞரின் மார்பில் விழுந்த அடி இரத்த வாந்தி எடுக்குமளவிற்கு அவர் உடல் நலத்தைப் பெரிதும் பாதித்துவிட்டது என்னலாம்.

இன்று நோய், வறுமை எல்லாவற்றையும் வென்று உறுதியோடு நின்று தொடர்ந்து விடுதலை இயக்கத்தில் பங்கு கொள்ளும் கவிஞரின் உணர்ச்சி வடிவம் நமக்கெல்லாம் வழி காட்டக் காண்கிறோம்.

கலைஞர் கருணாநிதி அவர்கள் கவிஞரைப்பற்றிச் சொல்லும்போது ''அவர் தமிழர் எழுச்சிக்குக் கிடைத்த தக்கதோர் படைக்கலன்'' என்று குறிப்பிட்டார். ''தமிழ் நாட்டுக்குக் கிடைத்த இரண்டாவது பாரதி'' என்று தமிழர் தலைவர் ஆதித்தனார் கவிஞரைப் பாராட்டினார். ''கவிஞர் காசி ஆனந்தன் குவிபுகழ் கொண்டு பல்லாண்டு வாழ்கவே'' என்று மனமார வாழ்த்தினார் பாவேந்தர் பாரதிதாசன்.

நாமும் கவிஞரை வாழ்த்துவோம்.

விடுதலை முரசு கொட்ட வந்த உணர்ச்சிக் கவிஞரே வாழ்க<br>
வீழ்ச்சியுற்ற தமிழினத்தை தட்டி எழுப்பவந்த<br>
வீரத்தின் முழுவடிவே வாழ்க, வாழ்க என்று<br>
வாய் நிறைய வாழ்த்துவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை கொண்டு வருவோம்!

எழுந்திரடா தமிழா!
ஏடா.... என்னடா உனக்
கின்னும் உறக்கமோடா?
பழந்தமிழர் நிலத்தை
ஈழம் என்றதோர் மண்ணைப்
பறி கொடுப்பதோடா?
அழுந்திடவோ பிறந்தோம்?
மூடா! ஆமை போலிருந்தால்
வழி பிறக்குமோடா?
இழந்த புகழ் பெறுவோம்
வாடா! நாமின்றி இங்கோர்
ஆட்சி நடப்பதோடா?

குடிப்பெருமை அனைத்தும்
சாய்ந்து குப்புற விழ
நாங்கள் குறைபாடுற்றோம்;
அடக்குமுறை தொடுக்கும்
பேயர் ஆட்சியின் பிடி
ஒன்றால் அவதியுற்றோம்!
துடித்தெழுவோம்.... நமது
வீரத் தோள்களுக்கொரு
வேலை துவக்கிவைப்போம்!
படைக்களத்தில் நடந்து
பார்ப்போம்! மார்புகள் எழப்
பாய்ந்து புறப்படடா!

சிறைக்கதவு திறந்து
வாவென் றழைப்பினும் சரி
ஆங்கே செருக்களத்தில்
நரிக்குரல்கள் எழுந்து
காதைப் பிளப்பினும் சரி
நாங்கள் பணியமாட்டோம்!
வெறிப்படைகள் நுழைந்து
தாக்கி நொறுக்கினால் அட....
வீழ்ந்து வணங்குவோமா?
மறக்குலத்தில் வளர்ந்த
வீரன் உயிரையும் விட
மானம் பெரிதன்றோடா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலியடித்த தமிழகம்

வலிபடைத்து முறமெடுத்துப்
புலியடித்த தமிழகம்
கிலி பிடித்த நிலைபடைத்து
வெலவெலத்து வாழ்வதோ?

பகையொதுங்கப் பறைமுழங்கிப்
புகழடைந்த தமிழகம்
கதி கலங்கி விழி பிதுங்கி
நடு நடுங்கி வாழ்வதோ?

படை நடத்தி மலை முகத்தில்
கொடி பொறித்த தமிழகம்
துடி துடித்து அடிபிடித்து
குடிகெடுத்து வாழ்வதோ?

கடல் கடந்த நிலமடைந்து
கதையளந்த தமிழகம்
உடல் வளைந்து நிலை தளர்ந்து
ஒளியிழந்து வாழ்வதோ?

மகனிறக்க முலையறுக்க
முடிவெடுத்த தமிழகம்
புகழிறக்க மொழியிறக்க
வெளிநகைக்க வாழ்வதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் சிரித்தாய் வான்முகிலே!

இடிக்கின்ருய்.... வான் முகிலே!
ஏன் இடித்தாய்? இங்குள்ள
தமிழர் நெஞ்சில்
வெடிக்கின்ற விடுதலையின்
பேரார்வம் வெளிக்காட்ட
விரும்பினுயா?

கருப்பாக வருகின்ருய்....
வான்முகிலே! ஏன் கருத்தாய்?
களத்தில் பாய
விருப்போடு நாள் பார்க்கும்
தமிழ் வீரர் வெறித்தோற்றம்
விளக்கினுயா?

சிரிக்கின்ருய்.... மின்னல் வாய்
வான்முகிலே! ஏன் சிரித்தாய்?
சினந்து மண்ணை
எரிக்கின்ற தமிழ்ப் புலவன்
கவிதையினை வானேட்டில்
எழுதினுயா?

ஓடிப்போ....! ஓடிப்போ....!
வான்முகிலே.... ஓவென்று
முழக்கமிட்டுப்
பாடிப்போ! அதிரட்டும்
மண்மேடு! காணட்டும்
பகைவர் என்போர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையின் புகழ்பாடு தோழி!

நானோர் கணுக்கண்டேன் தோழி — தமிழ்
 நாட்டின் விடுதலை கேட்கப் பிறந்தவர்
தானே நடத்தினர் தோழி — அங்கு
 சட்டம் உடைந்தது! பகைவர் தலைகள்
வானில் பறந்தன தோழி — இந்த
 வையம் குருதியில் தோய்ந்து கிடந்தது!
மானத்தின் வேகமோ தோழி? — தமிழ்
 மாந்தரின் வீரத்தை என்னென்று சொல்வேன்?

ஈழத்தில் சிங்களம் என்றார்! — தமிழ்
 இல்லத்தில் இந்திதான் என்றும் குலைத்தார்!
வேழத்தை வென்றவர் நாட்டில் — இந்த
 வீணர்கள் ஏன்வந்து மோதினர் தோழி?
கூழுக்கு வழியற்றுப் போனோம் — என்றால்
 குலவீரங்கூடவா இல்லாமல் போனோம்?
பாழுக்கு வந்தார்கள் தோழி! — வந்த
 பகைவரை வணங்காத தமிழ்நாடு வாழி!

வீண்சண்டை போட்டதும் இல்லை! — தமிழன்
 வீணுக வந்ததை விட்டதும் இல்லை!
தூணென்று சாய்ந்தாலும் சாயும்! — தமிழர்
 தோள்வீரம் இதுவரை சாய்ந்ததே இல்லை!
ஆணென்று வாழ்ந்தவரெல்லாம் — இங்கே
 ஆமைபோல் அடிமைபோல் உயிர்வாழ்ந்ததில்லை!
பூணுத போர்க்கோலம் பூண்டார்! — பகைவர்
 புலியோடு மோதினர் என் செய்வோம் தோழி?

காதலர் வரவில்லைத் தோழி! — அவர்
 களத்திலே இருக்கட்டும்! இங்கென்ன வேலை?
மோதட்டும் பகைவர்கள் முன்னால்! — தோழி
 முத்தமும் சத்தமும் வெற்றிக்குப் பின்னால்!
மாதர்கள் வீரமே பெரிதாம்! — அவர்
 மாண்டாலும் போரிலே மாளட்டும் என்பேன்....
ஆதலால் இசைபாடு தோழி! — தமிழ்
 அன்னையின் புகழ்பாடு.... வாழட்டும் நாடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழ்மை ஏனடா?

முந்தி முளைத்த கலங்கரை
தமிழ்ப் பரம்பரை — நடுச்
சந்தியில் வீழ்ந்து துடிப்பதேன்?
தாழ்ந்து கிடப்பதேன்?

அள்ளிக் கொடுத்தகை கேட்குதே!
ஓடு தூக்குதே! — இலை
கிள்ளிப் பொறுக்கித் திரியுதே!
உள்ளம் எரியுதே!

மாற்றார் தலைகளில் ஏற்றினாய்
கல்லை....! வாட்டினாய்! — இன்று
மூட்டை சுமந்து நடக்கிறாய்!
தாழ்ந்து கிடக்கிறாய்!

ஆதியில் மாடம் அமைத்தவர்
வாழ்வு சமைத்தவர்! — அட
வீதியில் காலம் கழிப்பதோ?
நால்வர் பழிப்பதோ?

'முல்லைக்குத் தேரை வழங்கினோம்!'
என்று முழங்கினோம்! — இங்கே
பிள்ளைக்குப் பாலில்லை பாரடா!
தருவார் யாரடா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவும் ஒரு வாழ்வே!

ஏடா! தமிழ் வீரா! உனை
எலிபோல் நினைத்தாரா?
வாடா படை யூடே அற
வலியின் துணையோடே!
நாடா பிணக் காடா என
நால்வர் மடிந்தாலும்
போடா அவர் வழியே! நகை
புரிவாள் தமிழ் மொழியே!

குண்டாந்தடி கொண்டே அடி
தந்தார் வெறியாளர்
என்றால் அது நன்றே! நமை
ஈன்றாள் புகழ் உண்டே!
பண்டை மொழி என்பார் தமிழ்....
பார்ப்போம் அதை வீணர்
வென்று விடுவார்கள்? மற
வேங்கை விடுவானோ?

'முத்தே! முழு நிலவே! விடை
மொழிவாய்!' என இல்லாள்
பத்தே விரல்பற்றி அவள்
பதிலின் வெறி பெற்று....
'சொத்தே! மொழி வித்தே! தமிழ்ச்
சொல்லே! உனக்காகச்
செத்தே மடிகின்றேன்!' எனச்
செல்வாய் தமிழ் ஏறே!

தங்கை சிறு தம்பி ஒரு
தந்தை வயதன்னை
மங்கை இளமனையாள் புது
மழலை முதலானோர்
என்கை தனிலுண்டே எனும்
ஏக்கம் விடு தோழா....
சங்கை பெறப் போவார்பெறும்
சாவும் ஒரு வாழ்வே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை கிடையாதோ?

கட முட என ஒரு கவியிடி
 கொடியவர் பொடிபட வெடியாதோ?
திடு திடு மென ஒரு படையணி
 அடிமைகள் படுதுயர் துடையாதோ?
மட மட என ஒரு நொடியினில்
 இடுகர விலங்குகள் ஒடியாதோ?
கொடியொடு படையொடு முடியொடு
 தமிழின விடுதலை கிடையாதோ?

மறவலி மிகுதமிழ் நெறியினர்
 சிறையக மதில்களை நிறையாரோ?
அறவலி யுடையவர் வெறிகொள
 உறுபகை தளர்வொடு முறியாதோ?
முறைகெட நெறிசெயு மரசினர்
 பறையொடு சுடலையில் உறையாரோ?
கறையொடு தமிழ்படு துயர்கெட
 வருபடை புகழ்மொழி அறியாதோ?

இழிநிலை ஒழியென மறமகள்
 வளர்இள மழலையை விளியாளோ?
வழி வழி புகழ்நிலை தழுவென
 உயிர்நிகர் கொழுநனை அழையாளோ?
ஒளிமிகு விழியொடு குலமெனு
 முணர்வொடு செருவிடை நுழையாளோ?
அழகிய தமிழ்ள மொழிமகள்
 களியினில் முழுநகை பொழியாளோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைக்கு விலை தருவோம்!

தவளைக் குரலில் முழங்கினுல் இங்குள்ள
தாழ்வு மறைந்திடுமோ? — நாலு
கவிதை எழுதிக் கிழித்துவிட்டால் இங்கு
கவலை குறைந்திடுமோ? — வீட்டுச்
சுவருக்குள் ஆயிரம் திட்டங்கள் தீட்டிச்
சுதந்திரம் வாங்கிடவோ? — தலை
குவியக் கிடந்த செருக்களம் ஆடிக்
குதிக்கப் புறப்படடா!

உச்சியில் நின்று விழுந்துவிட்டோம்! அட
உணர்ச்சி இழந்துவிட்டோம்! — உயிர்
அச்சத்தினுல் இங்கு சாய்ந்துவிட்டோம்! வீட்டில்
அடங்கி இருந்துவிட்டோம்! — தெருப்
பிச்சை எடுத்து வளர்ந்துவிட்டோம்! புகழ்
பேண மறந்துவிட்டோம்! — 'இந்த
எச்சில் நிலை இனி இல்லை' எனக்கொடி
ஏற்றிப் புறப்படடா!

நாற்றிசை மண்ணும் கடலும் மலைகளும்
நடுங்க வலம் வருவோம்! — பெரும்
ஆற்றல் மிகுந்தவள் அன்னை.... அவள்மிசை
ஆணை எடுத்திடுவோம்! — இங்கு
வேற்று நிலத்தவர் ஆட்சியெனில் அந்த
விலங்கை உடைத்தெறிவோம்! — அட
சோற்றுக்கு வாழ்ந்து சுருண்டது போதும்!
சுழன்று புறப்படடா!

உலகம் அனைத்தையும் வென்ற குலத்தினை
ஊழ்வினை வெல்லுவதோ? — எங்கள்
மலைகள் எனுமிரு தோள்களையும் விதி
மங்கை மறந்தனளோ? — அவள்
கலகம் நடத்தித் தமிழர் குலத்தைக்
கவிழ்க்க முடியுமோடா? — அன்னை
முலையில் பருகிய மூச்சுடனே பறை
முழக்கிப் புறப்படடா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழை மறப்பேனு?

பட்டினி கிடந்து பசியால் மெலிந்து
பாழ்பட நேர்ந்தாலும் — என்றன்
கட்டுடல் வளைந்து கைகால் தளர்ந்து
கவலை மிகுந்தாலும் — வாழ்வு
கெட்டு நடுத்தெரு வோடு கிடந்து
கீழ்நிலை யுற்றாலும் — மன்னர்
தொட்டு வளர்த்த தமிழ் மகளின் துயர்
துடைக்க மறப்பேனு?

நோயில் இருந்து மயங்கி வளைந்து
நுடங்கி விழுந்தாலும் — ஓலைப்
பாயில் நெளிந்து மரண மடைந்து
பாடையில் ஊர்ந்தாலும் — காட்டுத்
தீயில் அவிந்து புனலில் அழிந்து
சிதைந்து முடிந்தாலும் — என்றன்
தாயில் இனிய தமிழ்மொழியின் துயர்
தாங்க மறப்பேனு?

பட்டமளித்துப் பதவி கொடுத்தொரு
பக்கம் இழுத்தாலும் — ஆள்வோர்
கட்டி அணைத்தொரு முத்தமளித்துக்
கால் கை பிடித்தாலும் — என்னைத்
தொட்டு விழுந்து வணங்கி இருந்தவர்
தோழமை கொண்டாலும் — அந்த
வெட்டி மனிதர் உடல்களை மண்மிசை
வீழ்த்த மறப்பேனு?

பொங்கு வெறியர் சிறைமதிலுள் எனைப்
பூட்டி வதைத்தாலும் — என்றன்
அங்கம் பிளந்து விழுந்து துடிக்க
அடிகள் கொடுத்தாலும் — உயிர்
தொங்கி அசைந்து மடிந்து தசையுடல்
தூள்பட நேர்ந்தாலும் — ஒரு
செங்களம் ஆடி வரும் புகழோடு
சிரிக்க மறப்பேனு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் உணர்வு

ஆடா மயிலாய் அசையா இளங்கொடியாய்
ஓடா நதியாய் ஒரு புதிராய் — நாடெல்லாம்
வீசாத தென்றலாய் வீசும் தமிழ்ப்பெருமை
பேசாத வாய் பிணத்தின் வாய்!

புறமும் அகப்பாட்டும் காப்பியனுல் பூத்த
இறவா இலக்கணத்தின் ஏடும் — குறள்மொழியும்
ஆர்க்கும் சிலம்பின் அழகு தமிழ் நடையும்
பார்க்காத கண் பாவக் கண்!

கத்து கடல்பறித்தும் கல்லாதார் தீவைத்தும்
குத்து வடமொழியின் கூர்பட்டும் — இத்தனைக்கும்
வாடாத செந்தமிழின் வரலாறு கேட்டபின்
ஆடாத கால் ஆனைக்கால்!

வானம் அளவு வளர்ந்து மொழிக்கெல்லாம்
தானம் கொடுத்த தமிழேட்டில் — ஈனம்
படைக்க வந்தாரா? அவர் பல்லை ஓங்கி
உடைக்காத கை உலக்கை!

ஆளிருந்தால் என்ன? அழகிருந்தாலும் என்ன?
நீள்விழியார் நெஞ்சில் நிறைந்தென்ன?-கேள்தோழா
வையம் புகழும் தமிழ்க்கவிதை என் வாழ்வில்
செய்யாத நாள் செத்த நாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திமா அச்சகம்
மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org